# நற்கொடை.

---

## "HOW, WHEN, AND WHY SHOULD MISSION CHURCHES BECOME MISSIONARY?"

## "பரதேச சபை, எப்படி? எப்போ? ஏன்? சுயதேச சபையாக வேண்டும்?"

### "பரதேசசபை" ஆவது என்ன?

பரதேச குருமார் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து முயலுவதினால், அஞ்ஞானத்திலிருந்து இரட்சிக்கப்படுபவர்களை ஓர் கூட்டமாய்க்கூட்டி, அவர்களை ஒழுங்காய் அவர்கள் தாமே போஷித்து, விசாரித்து நடத்தி, அவர்கள் பிள்ளைகளுக்காகப் பள்ளிக்கூடங்களைக் கட்டி, அவைகளிற் பிள்ளைகளைச் சேர்த்து, அவைகளுக்கு உபாத்திமாரை வைத்து, புத்தகங்களை அச்சிட்டுக் கொடுத்து, உபதேசிமாரை ஏற்படுத்துவதுமல்லாமல், அஞ்ஞானிகளைக் கிறிஸ்தவர்களாக்குவதற்கு, மற்றும் அநேக வித்தனங்களைப் பிரயோகித்து இவைகளையெல்லாம் பரதேசத்தாரின் பண உதவியைக் கொண்டே மாத்திரம் நடத்திவருஞ் சபை எதுவோ அது பரதேச சபை என்னப்படலாம்.

### சுயதேச சபையாவது, என்ன?

கிறிஸ்தசபையின் இயல்புக்கேற்றபடி, தங்களுக்குக் குருமாரையும், உபதேசிமாரையும் பள்ளிக்கூடங்களையும் மற்றுள்ளவைகளையும் ஏற்படுத்தி, வேதமுறைப்படி அவைகளை நடத்துகிறதுமன்றி, அடுத்ததாயாயினுந் தூரமாயாயினுமுள்ள அஞ்ஞான மார்க்கத்தவர்களைக் கிறிஸ்தவர்களாக்குவதற்குத் தன்னுலியன்றபடி முயலுஞ் சபையே சுயதேச சபை என்னப்படலாம். இப்படியிருக்கில்,

கவது. பரதேச சபை சுயதேச சபையாவது எப்படி?

கவது. தன் குருமாரை முழுவதும் ஏற்றபடி தாபரித்து வருவதினால், அப்படி ஆகக்கூடும். எந்தச் சபையாயினுஞ் செய்யவேண்டிய பிரதான கடமை இதுவே. இதைச் செய்ய முன், தூரமானவர்களுக்குக் குருமாரை அனுப்புவது, ஒழுங்கல்ல. இது தன் சபைஞ் சிறிதென்றும், பிறர் சபை பெரிதென்றும், எண்ணினாற் போலிருக்கும். பெற்றோர் தங்கள் பிள்ளைகளைத் தாபரியாமல், அன்னியப் பிள்ளைகளைத் தாபரிப்பார்களோ? இப்படிச் செய்யவே மாட்டார்கள். ஆனபடியால் இத்தேச சபையார் தங்கள் பேரிற் தங்கிய கடமையாகிய சுயதேச குருமாரைத் தாபரிக்குதலே முயலுவார்களாக.

உவது. தங்கள் குருமாரைத் தாபரிக்கிறது மாத்திரமல்ல, சபைக்குரிய ஒழுங்குகளெல்லாவற்றையுங் கைக்கொள்வதினால் வருஞ் செலவெல்லாவற்றையும் பொறுத்துக்கொள்ளவும் வேண்டும். உதாரணமாக, ஓர் சபை தன் பிள்ளைகளைத் தானே படிப்பித்துப், பள்ளிக்கூடங்களைக் கட்டி, உபாத்திமாருக்குச் சம்பளங் கொடுத்து, அவைகளைக் கிரமமாய்ச் சோதித்து, தன் வியாதியஸ்தரை விசாரித்துப் பேணி, தரித்திரரை ஆதரித்துத், தானே தேசம் நிறைந்த ஓர் குடும்பம்போல நடக்கவேண்டும்.

கூவது. தன் இனத்தார், சிநேகிதர், அயலாராகிய அஞ்ஞானிகளைச் சீர்ப்படுத்த முதன் முதல் முயலுவதினாற், பரதேசசபை சுயதேச சபையாரும். தன் இனத்தார், சிநேகிதர், அயலாரைக்குறித்துக் கவலையில்லாமற், தூரமான சாதியாரைக்குறித்தோ துக்கித்து, அவர்களை இரட்சிக்க வேண்டுமென்று முயலுவது சுவிசேஷ முறைமையல்ல. புளித்தமாவின் உவமையென்ன? அதை மறந்துவிட்டீர்களா? அடுத்தவனை முன்னமே சீர்ப்படுத்தி, அவனைக்கொண்டு அப்பாவிருப்பவனையுஞ் சீர்ப்படுத்த வேண்டுமென்பதே யேசுநாதர் இதைக்கொண்டு, போதித்த சத்தியம். சபையார் தங்கள் கிராமங்களிற் பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்து, அவைகளைப்போதிக்க உபதேசிமாரை வைத்து, அக் கிராமங்களிற்தானே வேத புத்தகங்களையுஞ்,

சிறுபுத்தகங்களையும் எங்கும் பரம்பச் செய்து, வீடுகள்தோறுஞ் சந்தித்து, மற்றும் எந்தப் பிரயத்தனங்களையுங்கொண்டு, அவர்களை இரட்சிக்கப் பிரயாசப்பட்டதின்மேல், தூரதேசத்தவர்களைச் சீர்ப்படுத்தப் பிரயாசப்படுவது தகுதி.

## உ. பரதேச சபை எப்போ சுயதேச சபையாகக் கூடும்?

க. பரதேசத்தவர்கள் இனி உதவி செய்யமாட்டோமென்று சொல்லும்வரைக்கும் முயலாமல் சும்மா இருப்பது ஆகாது. இப்படிச் செய்வது பெரிய நன்றிக்கேடாய்மாத்திரமிருப்பதன்றி, பிறர் பொருளை அநியாயமாய் அபகரிப்பது போலே இருக்கும்.

உ. ஐம்பது குடும்பத்தார் சபையைச் சேர்ந்திருக்கும்போது, இப்படிச் செய்யக்கூடும். பூருவகாலத்திலேஅவருக்குள், பத்துக்குடும்பத்தார் ஓரிடத்திலிருந்தால், அங்கே அவர்கள் தங்களுக்கு ஓர்செப ஆலயங்கட்டவேண்டுமென்று கட்டளையிருந்தது. ஒய்வுநாட்கள்தோறும் அவர்கள் அவ்வாலயத்திற் சேருவார்கள். செப ஆலயத்தலைவனும், அவர்களும், வேதத்தை வாசித்து, வியாக்கியானம்பண்ணி, சம்பாஷித்து, ஆராதனைசெய்து முடிப்பார்கள். இத்தேசத்தார் அப்படிச் செய்யக்கூடாதா?

ங. ஓர் சபையிலே சேர்ந்திருக்கிறவர்களின் தொகையை எண்ணுமல், அச்சபை தன்னைத் தாபரிக்குந் திராணிஉள்ளதாயிருக்கிறபொழுதே இப்படிச் செய்யவேண்டும். யாழ்ப்பாணத்துச் சபைகள் அநேகம், பத்திலொரு பங்கு கொடுத்தால், உடனே சுயதேச சபைகளாகலாம். உதாரணமாக, இத்தேசத்துக் கிறிஸ்தவர்கள், நாள்வீதமாசப், பத்துப் பேனிசு சம்பாதிக்கிறார்களென்று வைத்துக் கொள்வோம். அப்படியாகில், ஒருவன் பத்திலொன்று கொடுத்தால், மாதம் இருபது பணஞ் சேரும். இப்படிக் கொடுப்பவர்கள் ஐம்பதுபேர் சபையிலிருந்தால், மாதம் ஆறு பவுண் ஐந்து சிலின் கூடும். அப்போ வருஷமுடிவிலே, பொக்கிஷக்காரனிடம் எழுபத்தைந்து பவுண் கையிருப்பாகும்.

பின்வரும் இடாப்பைக் காண்க:—

| சபையார். | மாதவீதம். | | | சபையார் | மாதவீதம். | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | " | 2 | 6 | 8 | 1 | " | " |
| 2 | " | 5 | " | 9 | 1 | 2 | 6 |
| 3 | " | 7 | 6 | 10 | 1 | 5 | " |
| 4 | " | 10 | " | 20 | 2 | 10 | " |
| 5 | " | 12 | 6 | 30 | 3 | 15 | " |
| 6 | " | 15 | " | 40 | 5 | " | " |
| 7 | " | 17 | 9 | 50 | 6 | 5 | " |

வருஷம் ஒன்றுக்கு ஆகத் தொகை பவுண் எதி:

உ. பரதேச சபை சுயதேச சபையாகவேண்டியது என் ?

க. சபையென்ன? அதின்கடமைகள் என்ன? இவைகளை ஆராய்ந்து அறிந்தால், இப்படி முயலவேண்டுமென்றே பிரத்தியட்சமாய்த் தோன்றும். சூரியன், தான் என் பிரகாசிக்கவேண்டுமென்று கேட்குமா? மேகம், தன்னிடத்திலிருக்கும் மழையை என் வருஷிக்கவேண்டுமென்று கேட்குமா? நதி, நான் என் ஓட வேண்டுமென்று கேட்குமா? கேட்டாலும் மறுமொழியென்ன? நீ சூரியனைபடியினற் பிரகாசிக்கவேண்டும். நீ மேகமானபடியினல் மழையை வருஷிக்கவேண்டும் நீ நதியானபடியால் ஓடவேண்டும். அதுபோல, எந்தச் சபையையும் பார்த்து, நீ சபையானபடியாற் சபைக்கேற்றபடி முயலவேண்டியது அவசியம் என்னலாம். கிறிஸ்தசபை பூமிக்கு ஒளியல்லவா? அது பிரகாசிப்பது ஆச்சரியமல்லவே, கடமை.

உ. பரதேச சபை சுயதேச சபையாகவேண்டியது என்? இறிஸ்து யேசு அப்படியாகவேண்டுமென்று கட்டளையிடுகிறதினுற்தான். கிறிஸ்து யேசு சபைக்குத் தலைவர். ஆனதால், அதைநடத்தத் தத்துவமுள்ளவர். அவர் சபைக்கு எந்தக் கட்டளையிடுவாரோ அதைக் கைக்கொள்வது அதற்குக் கடமை. இதற்கு ஆட்சேபமில்லை. ஆனபடியால், யேசு சபையைப் பார்த்து "நீங்கள் புறப்பட்டுப்

போய்ச், சகுவதேசத்தாரையுஞ் சிஷராக்கி, பிதாக்குமார் பரிசுத்த ஆவியின் நாமத்தினால் அவர்களுக்கு ஞானஸ்நானங் கொடுத்து, நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையுங் கைக்கொள்ளும்படி அவர்களுக்கு உபதேசம் பண்ணுங்களென்கிறார்."

க. பரதேசசபை சுயதேச சபையாகவேண்டியது என்? உலகத்தாருக்கு அது மிகவுந் தேவையாயிருப்பதினாற்றான். உலகத்தார் மாணவிழலில் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒளி பிரகாசித்தல் வேண்டும். உலகத்தார் தேவனுக்குப் பகைஞராயிருக்கிறார்கள். சபை அவர்களை மேற்கொண்டு அவர்களுக்குள் கிறிஸ்துவின் இராச்சியத்தை ஸ்தாபிக்கவேண்டும். உலகத்தார் பசாசின் கையில் அகப்பட்டு, அவன் இஷ்டப்படி நடத்தப்படுகிறார்கள். அவர்களை விடுதலையாக்கித், தேவனுக்குச் சுயாதீனமுள்ளவர்களாக்க வேண்டும். பாருங்கள் உங்கள் இனத்தார், சிநேகிதர், அயலார், நிரள் நிரளாய்க் கெட்டுப்போகிறார்கள். சாதித இவர்களை இரட்சிக்கப் பிரயாசப்பட்டீர்களா?

ச. கிறிஸ்தவனுக்குரிய சகல இலட்சணங்களும் விருத்தியாகும்படி, பரதேச சபை சுயதேச சபையாகவேண்டியது அவசியம்.

சபை கூடி முயலுவதினால், ஆவியின் கனியாகிய அன்பு, சந்தோஷம், சமாதானம், நீடியபொறுமை, தயை, நற்குணம், உண்மை, தாழ்ந்த சிந்தை, இச்சையடக்கம்" என்னுமிவைகள் விருத்தியாகக்கூடும். மற்றப்படியல்ல. யாழ்ப்பாணத்திலிருக்கிற நாலு இலட்சம்(400,000)சனத்துள் ஓர் ஆயிரம்பேர் கிறிஸ்தவர்களாய் இருப்பார்களாக்கும். இதினால் நாம் கற்றுக்கொள்ளவேண்டிய படிப்பினைகள்என்ன?

க. நானூறுபேரில் முந்நூற்றுத் தொண்ணூற்றொன்பதுபேர் அந்நானத்திலும் பாப்பிய மார்க்கத்திலும் வழிதப்பித் திரிகிறார்களே. இது பரிதாபமல்லவோ? கிறிஸ்தவர்களுக்கு மகாதுக்கமல்லவோ? யாழ்ப்பாணக் கிறிஸ்தவர்களே, எரேமியாத் தீர்க்கதரிசியைப்போல "ஐயோ என் தலை நீர்களும் என் கண் நீரூற்றின் கண்

களுமாயிருந்தால் நலம்: அப்பொழுது நான் குமாரத்தியென்னும் என் சனங்களின் கோலியுண்டவர்களின் நிமித்தம் இரவும் பகலும் அழுவேன்" என்று சொல்லிப் புலம்புவீர்களாக.

உ. அஞ்ஞானத்தில் அமிழ்ந்தியிருக்கிற இத்தனை திரளான சனங்களைக் கிறிஸ்தவர்களாக்குவது, தேவன் சபையாருக்கு நியமித்த மகா பெரிய வேலையல்லவா? முயலக் கூடியவன் முயலக்கடவன்.

ரு. சபையார் தனித்தனியாய்ப் பிரிக்கப்பட்டு, அவனவன் தன்தன் இஷ்டப்படி நடக்கிறதினாலல்ல, சகலரும் எழும்பி, ஏகசிந்தையுள்ளவர்களாக முயல்வதினாலும் இத்தேசம் சீர்ப்படுத்தப்படும்.

ச. தன்னையே தகனப்பலியாகச் செலுத்தி, ஆத்துமாக்களை இரட்சிக்க அதிகமாய் எரியும் வயிராக்கியத்தைக் காட்டிக், கர்த்தராகிய யேசுக்கிறிஸ்துவின் நுகைக்குரிய யுத்தவீர சர்வாயுதங்களைப் பிரயோகித்து, இராசாதி இராசாவை மகிமைப்படுத்தும்படி தயிரியமாய்ப் போராடி, முயலுவதற்குத் தேவன் இத்தேசத்துக் கிறிஸ்தவர்களுக்குத் தந்திருக்குஞ் சமயம் இதுவே. இத்தேசத்துச் சபையே, "எழும்பு பிரகாசமாயிரு, உன் ஒளி வந்து விட்டது, யெகோவாவின் மகிமைப் பிரகாசம் உன் மேல் உதயமாயிற்று."

## வேதவாக்கியங்கள்.

பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் பொருளைக்குறித்து, நான் கலாத்தியவின் சபைகளுக்கிட்ட கட்டளைப்படி நீங்களுஞ் செய்யுங்கள். நான் வரும்பொழுது பொருள் சேர்க்குதல் இராதபடி, உங்களில் ஒவ்வொருவனும், தன் தன் வரவுக்குத்தக்கதை வாரத்தின் முதல்நாட்கள் தோறுந் தன்னிடத்திற் கூட்டிவைக்கக் கடவன். க. கொரி. கசு: க; உ.

சகோதரரே, மக்கெதோனியாவின் சபைகளுக்குத் தேவன் அருளியகிருபையை உங்களுக்கு அறிவிக்கிறே

ன்.— அவர்கள் மிகுந்த உபத்திரவத்தினூற் சோதிக்கப்ப டுகையிற் கொடிய தரித்திரராயிருந்தும், தங்கள் பரிபூர ண சந்தோஷத்தினுல் அதிக உதாரமாய்க் கொடுத்தார் கள். அவர்கள் தங்களாலானமட்டும், தங்கள் பலத்திற் கு மேலாகவுங்கொடுக்கத் தாங்களே மனதுள்ளவர்களா யிருந்தார்களென்பதற்கு நானே சாட்சி. தங்கள் உப காரத்தையும், பரிசுத்தர்களுக்குச் செய்யப்படும் தரும வூழியத்தின் பங்கையும் ஏற்றுக்கொள்ளும்படி, அவர்க ள் எங்களை மிகவும் வேண்டிக் கொண்டார்கள். அவர் கள் செய்ய நாங்கள் நம்பியிருந்தபடிமாத்திரமல்ல,-அத ற்கதிகமாய் முன்பு கர்த்தருக்கும், தேவனுடைய சித்த த்தின்படி, பின்பு எங்களுக்குந் தங்களைத் தாமே ஒப்பி த்தார்கள். அதினுல் தீத்து,தான் முன் தொடங்கின பிர காரமாக இந்தத்தருமகாரியத்தை உங்களிடத்தில் முடி க்கும்படி அவனை வேண்டிக் கொண்டோம். ஆதலால் விசுவாசம், வாக்குவல்லபம், அறிவு, பூரணசாக்கிரதை, எங்களிடத்தில் நீங்கள் வைத்த அன்பு என்னும் இவை களில் நீங்கள் பெருகியிருக்கிறது போல, இந்தத் தரும த்திலும் பெருகவேண்டும். இது கட்டளையென்று நான் சொல்லுகிறதில்லை. பிறருடைய சாக்கிரதையினிமித்த மும், உங்கள் அன்பின் உண்மையைப் பரீட்சிக்கும் பொருட்டுஞ் சொல்லுகிறேன். நம்முடைய கர்த்தராகி ய யேசுக்கிறிஸ்துவின் கிருபையை நீங்கள் அறிந்திருக் கிறீர்கள். அவர் ஐசுவரியமுள்ளவராயிருந்தும், நீங்கள் அவருடைய தரித்திரத்தினுல் ஐசுவரியவான்களாகும் படி, உங்கள் நிமித்தந் தரித்திரரானுரே. ஆதலால் செ ய்கிறதற்கு மாத்திரமல்ல,- ஒரு வருஷத்திற்கு முன்னே ஆரம்பம் பண்ணவும் விருப்பமுள்ளவர்களாயிருந்த உங் களுக்கு இதைக்குறித்து நான் கொண்ட எண்ணம் இன் னதென்று சொல்லுகிறேன். செய்கிறதையும் இப்பொழு து நிறைவேற்றுங்கள். தீர்மானிக்கிறதற்கு எப்படி உற் சாகமுண்டாயிருந்ததோ, அப்படியே உங்களுக்குண் டானவைகளில் எடுத்து நிறைவேற்றுவதற்கும் உற்சாக முண்டாவதாக. ஒருவனுக்கு மன விருப்பமுண்டானுல் அவன் தனக்கில்லாததின்படியல்ல, தனக்குள்ளதின்ப டி அங்கிகரிக்கப்படுவானே. மற்றவர்களுக்கு இலகு

வும், உங்களுக்குப் பாரமுமுண்டாகும்படிக்கல்ல, -சம மான நிலையுண்டாகும் பொருட்டாகவே, அதிகமாகச் சேர்த்துக்கொண்டவனுக்கு அதிகமும், குறைவாகச்சேர்த்துக்கொண்டவனுக்குக் குறைவுமில்லை என்று எழுதியிருக்கிற பிரகாரம், உங்களுடைய பரிபூரணம் அவர்களுடைய வறுமையை நீக்குவதிலுமும், இக்காலத்தில் அவர்களுடைய பரிபூரணம் உங்களுடைய வறுமையை நீக்குவதிலுமும் இப்படிச் சம நிலையுண்டாயிருக்குமென்பது என்னுடைய அபிப்பிராயம். உ கொரி அ: க—கடி.

முற்றிற்று.

Printed for the Jaffna Religious Tract Society, by Strong & Asbury
Jaffna, 1868. Edition, 5,000.